# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை: திரு. A.S. அமீர்தீன், B.A., B.L.,L.L.M., D.J.J.J.Psy.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

(முழு கூடுதல் பொறுப்பு)

திருவள்ளுவராண்டு 2053, ஸ்ரீ சுபகிருது வருடம் பங்குனித் திங்கள் 10 ஆம் நாள்

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம்24 ம் நாள் வெள்ளிக் கிழமை

**<u>அசல் வழக்கு எண்.22/2021</u>**

(CNR No.TNTV06-000043-2021)

திருத்துறைப்பூண்டி முன்சிபி & தாலுக்கா, கீராளத்தூர் வட்டம், நெ.3/314, திருக்கொள்ளிக்காடு கிராமத்தில் வசிக்கும் அப்துல்வாஹீது மனைவி, இந்தியன், முஸ்லீம், 50 வயதுள்ள ஜுலைகாபீவி.

... வாதி

/ எதிர்/

1. மன்னார்குடி முன்சிபி & தாலுக்கா, இருள்நீக்கி வட்டம், சின்னக்குருவாடி கிராமம், மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் கோவிந்தன் குமாரர், இந்து, 60 வயதுள்ள உதயகுமார்.
2. மன்னார்குடி முன்சிபி & தாலுக்கா, இருள்நீக்கி வட்டம், சின்னக்குருவாடி கிராமம், மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் கோவிந்தன் குமாரர், இந்து, 40 வயதுள்ள ஜீவா.

... பிரதிவாதிகள்

வாதியின் அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்துவரும் தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, எந்த வகையிலும் அத்துமீறி பிரவேசிக்காமல் இருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் மற்றும் தாவா செலவுத்தொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தி வைக்கவும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 08.02.2021

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 08.02.2021

இவ்வழக்கின் வழக்கெழு மூலம் 22.08.2013, 24.06.2019, 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலும், 2021 ஜனவரி மாதத்திலும் சமூக நீதிமன்ற எல்லைக்குட்பட்ட மன்னார்குடி தாலுக்கா, இருள்நீக்கி வட்டத்தில் உற்பத்தி.

**நீதிமன்றக் கட்டண விவரம்**

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு வாதியின் பொறுமானம் ரூ.1000.00 இதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 27(சி)ன்படி செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணம் ரூ.30.00/-

**<u>வழக்கு பொறுமான விபரம்</u>**

| | |
|---|---|
| நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்துக்கு வாதியின் பொறுமானம் | ரூ.1000.00 |
| தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச் சட்டம் பிரிவு 27(சி)ன்படி செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணம் | ரூ.30.00 |

இவ்வழக்கு என் முன்பாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு, S. உதயகுமார் அவர்களும் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G,ஜீவானந்தம் அவர்களும் முன்னிலையான நிலையில், வாதியை அழைத்தும் வருகையில்லாததால், வாதியின் தவறுகைக்காக இவ்வழக்கு தள்ளுபடி செய்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவா.று வழங்கும்,

## தீர்ப்பாணை

1. வாதியின் தவறுகைக்காக இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2. செலவுத் தொகை பற்றி உத்தரவு இல்லை.

2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

(Sd/- A.S. அமீர்தீன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி (மு.கூ. பொ).

## சொத்து விபரம்

நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார் பதிவகம், மன்னார்குடி தாலுக்கா, 63 இருள்நீக்கி வருவாய் கிராமத்தில் பட்டா எண்.502

1. புல எண்.366/1-ல் நஞ்சை 0.53.50 ஏர்ஸ்

2. புல எண்.367/3 சி-ல் 0.31.50 ஏர்ஸ்

ஆகக் கூடுதல் 0.85.00 ஏர்ஸ்.

**நான்கெல்லை விவரம்** :

ராமச்சந்திரன் நிலத்திற்கு கிழக்கு, வாதியின் கணவருடைய சகோதரர் சர்புதீன் நிலத்திற்கு மேற்கு, வாதியின் இதர சொத்துக்கு தெற்கு, அப்துல்காதர் நிலத்திற்கு வடக்கு இதற்குட்பட்டது.

(Sd/- A.S. அமீர்தீன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி (மு.கூ. பொ).

Valuation Slip

IN THE COURT OF DISTRICT MUNSIF OF MANNARGUDI

O.S.No.22/2021

ஜூலைகாபீவி ... வாதி

/ எதிர் /

1. உதயகுமார்

2. ஜீவா ... பிரதிவாதிகள்

| | | |
|---|---|---|
| Court fee section and sub section | : | Sec. 27(c), T.N.C.F. Act |
| Nature of Suit | : | Permanent Injunction |
| valuation of the Suit | : | Rs.1,000/- |
| Court Fees | : | Rs.30/- |

//By Order//

Head Clerk,
District Munsif Court,
Mannargudi.